**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 13-02-2024**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2024-02-13 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2024-02-14 | 2024-02-15 | 2024-02-16 | 2024-02-17 | 2024-02-18 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 1.0 | 1.0 | 0.0 | 0.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 33.0 | 33.0 | 33.0 | 32.0 | 33.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 22.0 | 22.0 | 23.0 | 22.0 | 22.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 90 | 90 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 50 | 50 | 50 | 40 | 40 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 14 | 16 | 16 | 18 | 16 |
| காற்றின் திசை (கோணம்) | 50 | 50 | 50 | 50 | 50 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 3 | 4 | 3 | 3 | 3 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

அடுத்த ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலை நிலவ வாய்ப்புள்ளது.அதிகபட்ச வெப்ப நிலை 32.0°C - 33.0°C எனும் வேறுபாட்டிலும், குறைந்தபட்ச வெப்ப நிலை 22.0°C - 23.0°C. வேறுபாட்டிலும் இருக்கும். வானம் அடுத்த ஐந்து நாட்களுக்கு தெளிவாக காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 14 - 16 கிலோமீட்டர் வேகம் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

## பொது ஆலோசனை:

பயறு வகைகள், காய்கறிப் பயிர்கள் மற்றும் நிலக்கடலை பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் தென்படும் இதனை கட்டுப்படுத்த 5% வேப்பங்கொட்டை கரைசல் தெளிக்கலாம்.

## குறுஞ்செய்தி :

ஆட்டுக்கு குட்டிகளில் வளர்ச்சி மற்றும் உற்பத்தியை அதிகரிக்க தாதுப்பு கட்டிகளை கொட்டகைகளில் கட்டி வைக்கவும் . விவசாயிகள் ஆடுகளுக்கு குடல் புழு மற்றும் ஒட்டுண்ணி நீக்கம் செய்யலாம் .

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கரும்பு | கரும்பு சாகுபடியில் மேலூரமிடுதல் நல்ல பயனளிக்கும். கிணற்றுப் பாசனமுடைய பகுதிகளில் ஒரு எக்டேருக்கு 225 கிலோ தழைச்சத்து மற்றும் 112 ½ கிலோ சாம்பல் சத்து என்ற அளவில் |

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | மூன்று சம பாகங்களாகப் பிரித்து, கரும்பு நடவு செய்த 30, 60 மற்றும் ம் நாட்களில் இடுதல் வேண்டும். |
| எள் ( கிங்கேல்லி / டில்) | வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் இறவை எள் விதைப்பு மேற்கொள்ளலாம் களைகளை கட்டுப்படுத்த களை முளைப்பதற்கு முன் பயன்படுத்தும் களைக்கொல்லியான அலக்குளோர் ஒரு எக்டருக்கு1 கிலோ அல்லது மெட்டாலார்குளோர் கிலோ கலந்து பன்படுத்த வேண்டும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தென்னை | நிலவும் தட்பவெப்ப சூழ்நிலையில் தென்னந்தோப்புகளில் களைகளைக் கட்டுப்படுத்த இதுவே உகுந்த தருணமாகும். இருவித்திலை இலைகள் நிறைந்த தோப்புகளில் களை முளைப்பதற்கு முன் அட்ரசின் களைக்கொல்வியைஒரு எக்டருக்கு ஒரு கிலோ அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம். புல் வகை மற்றும் கோரை வகைகளைச் செடிகள் உள்ள தோப்புகளில் ஒரு விட்டர் தண்ணீருக்கு 16 மில்லி கிளைபோசேட் என்னும் களைக்கொல்லி 10 மிலி மற்றும் 20 கிராம் அம்மோனியம் சல்பேட் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். |
| வாழை | நிலவும் வறண்ட வானிலையினால் வாழையில் இலைப் பேன் தென்பட வாய்ப்புள்ளதால் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 0.5 மிலி தையோமித்தாக்சைம் அல்லது இமிடாகுளோர்பிட் 5 மிலி என்ற அளவில் ஒட்டுப்பசையுடன் கலந்து தெளிக்கவும்.தற்போது நிலவும் பருவசூழ்நிலையில் பூவன், ரஸ்தாளி, மொந்தன், கற்பூரவள்ளி மற்றும் நெய் பூவன் போன்ற வாழை இரகங்களை (பிப்ரவரி முதல் ஏப்ரல்) நடவு செய்ய ஏற்ற காலமாகும். இந்த இரகங்களில் நூற்புழுக்களின் தாக்குதல் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது. இதனைக் கட்டுபடுத்த நடவுக்கு வாழைக் கன்றுகளை நூற்புழுக்கள் தாக்காத இடங்களிலிருந்து தேர்வு செய்ய வேண்டும். வாழைக் கன்றுகளை நடுவதற்கு முன் கிழங்குப் பகுதியில் உள்ள வேர்கள் மற்றும் கருநிறப் பகுதிகளை கத்தியால் நன்கு சீவி விட்டு, களிமண்ணில் குழைத்து கிழங்கை முக்கி எடுத்து அதன் மீது 5 கிராம் சூடோமோனஸ் புளூரசென்ஸ் 5 கிராம் டிரைக்கோடெர்மாவிரிடி 5 கிராம் மற்றும் பேசிலஸ் என்ற உயிரியல் இடுபொருட்களைப் பரவலாகத் தூவி பின்னர் நட வேண்டும். |
| மல்லி கை | பூக்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் பூக்கள் வளரும் பருவம் மற்றும் பூக்கும் பருவம் ஆகிய பருவத்தில் பூ தோட்டத்தில் அதிக வெப்பத்தினால் ஏற்படும் தாக்கத்தை குறைக்க பயிர் மூடாக்கு செய்யலாம். மேலும் இலைப்பேன் மற்றும் அசுவினி தாக்குதல் அதிகமாக வாய்ப்புள்ளது. எனவே இதை கண்காணித்து 5 % வேப்ப எண்ணெய் கொட்டை சாறு தெளிக்கலாம். |